## அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபை - 2022

---

### 1. நிதிக் கூற்றுக்கள்

#### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

#### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ஊழியர் சம்பள மீளளிப்புப் பெறுமதி ரூபா 500,000 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும் என. | பெற வேண்டிய மீளளிப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளுக்குரிய அறவீடு செய்யப்படாமல் காணப்படும் ரூபா 143,120 இற்கான வியாபார வரி வருமானம் பதவழித்தல் மீளாய்வாண்டிற்காக செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறுதலாக மீளாய்வாண்டிற்கான செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டதென. | ஆண்டிற்கான செலவுகள் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீன் விற்பனவு நிலையத்தினை வாடகைக்கு கொடுக்கும் போது அறவீடு செய்யப்பட்டிருந்த ரூபா 131,039 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யாமல் பலவின வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்படும் என. | வருமானம் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கடையறையொன்று வாடகைக்கு கொடுக்கும் போது வாடகையாளரிடம் பெற வேண்டிய ரூபா 80,000 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | வருமானம் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாகாண சபையினால் மீளாய்வாண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த ரூபா 3,000,000 இற்கான மீண்டுவரும் செலவுக்கான உதவி மூலதன வருமான உதவி என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இந்த வருமானத்தை ஏனைய வருமானங்களில் கீழ் கணக்கீடு செய்யப்படும் என. | வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் மோட்டார் கிரேடர் இயந்திர வாடகையாக முன்னைய ஆண்டுகளின் போது 13 நபர்களினால் மிகையாக செலுத்தியிருந்த ரூபா 141,250 இற்கான தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் வருமானம் முற்பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடத்திற்கான நிதிக் கூற்றின் மூலம் சரி செய்யப்படும் என. | கடன் கொடுத்தோர் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 1994 இன் 04 இலக்க தென் மாகாண முத்திரைக் கட்டணம் திருப்பும் நியதிச் சட்டத்தின் படி சபைக்கு கிடைக்கப் பெறாத 2020 ஆண்டிற்குரிய ரூபா 296,600 இற்கான முத்திரைக் கட்டணம் மீளாய்வாண்டு இறுதி வரை பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடத்திற்கான நிதிக் கூற்றின் மூலம் சரி செய்யப்படும் என. | பெறவேண்டிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 88 வியாபார அலகுகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமையால் பெற வேண்டிய வியாபார மற்றும் அனுமதிக் கட்டண வருமானம் ரூபா 97,065 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆண்டு முதல் வழக்குப் பதிவேடொன்று பேணப்பட்டு வந்திருக்காமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்தது என. | பெற வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | கிராமியப் பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2021 இன் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 04 பாதை நிர்மாணித்தல் செயற்திட்டங்களுக்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 71,362 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் ஏற்பாடுகளுக்கான ஒதுக்கங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | சபைக்குச் சொந்தமான 03 நூலகங்களுக்கு நூலகப் புத்தகம் கொள்வனவு செய்யும் போது கிடைத்திருந்த கழிவு ரூபா 39,995 இற்கான கழிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கிடைத்த கழிவு கணக்கீடு செய்யப்படும் என. | வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதற்குரிய துணைப் பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 3,631,075 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 196,105 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | விரிவான அட்டவணை எதிர் காலத்தில் தயாரிப்பதற்கு மற்றும் தீர்ப்படாத கொடுக்கல் வாங்கல்களின் மீதி பல வருட காலமாக நிலவுகின்ற மீதிகளாகும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதியப் பிரமாணம் 571 | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 959,758 இற்கான 33 வைப்பு மீதிகளை ஆதனவழிப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 604,332 தொகை தீர்க்கப்பட்டதுடன், ரூபா 101,275 தொகை இறப்புப் பணிக்கொடை மீதியொன்றெனவும் ரூபா 254,150 தொகை தொடர்பாக சிக்கல் காணப்படுகின்றன என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரிவு 02 (iv) | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 62 நாட்களுக்காக உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 135,584 இற்கான விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | விடுமுறை நாள் சம்பளம் பெற்றிருந்த நாட்களில் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்துவதற்காக தினவரவுப் பதிவேடு, வெளிச்செல்லல் பதிவேடு மற்றும் வெளிக்கள குறிப்புப் புத்தகம் பயன்படுத்தப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,421,128 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,979,500 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 802,000 | 747,070 | 781,430 | 31,030 | 761,000 | 707,660 | 673,540 | 65,390 |
| வாடகை | 13,966,850 | 13,401,004 | 13,654,221 | 230,914 | 13,460,401 | 14,935,546 | 11,989,306 | 484,131 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,499,480 | 3,088,621 | 3,224,565 | 125,881 | 1,956,270 | 2,887,873 | 2,631,641 | 261,825 |
| ஏனைய வருமானங்கள் | 143,796,662 | 46,610,639 | 45,279,519 | 4,117,440 | 2,294,930 | 2,212,711 | 1,803,677 | 2,786,320 |
| மொத்தம் | 161,064,992 | 63,847,334 | 62,939,735 | 4,505,265 | 18,472,601 | 20,743,790 | 17,098,164 | 3,597,666 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 25 வர்த்தகங்கிலிருந்து வியாபார வரி ரூபா 31,030 தொகை அறவீடு செய்வதற்காக பிரதேச சபைச் அதிகார சட்டத்தின் பிரிவு 159(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை எதிர்காலத்தில் அறவீடு செய்யப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2013 ஆண்டின் போது சபையின் அதிகார பிரதேசத்தில் 04 பிரிவுகளை முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்டு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 134(1) இணங்க வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் (தெற்கு) சுற்றறிக்கையின் பந்தி 04 இற்கு இணங்க தெபொக்காவ கடையறை இலக்கம் 04 இன் உரிமை 2022 ஜூலை 28 திகதி வேறொருவருக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், அந்த சாட்டுதலின் போது அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 80,000 இற்கான ஒரே தடவையில் செலுத்தும் பணம் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஜனவரி 30 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்யப்படும் என. | நிலுவை ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் வாகனங்களை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பெற வேண்டியிருந்த ரூபா 190,880 இற்கான வாகன வாடகை வருமானம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 26,222 தொகை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டதெனவும், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,378,868 தொகை மற்றும் ரூபா 3,295,294 தொகை காணப்பட்டது. | நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹவெலி அதிகார சபையினால் குப்பை முகாமைத்துவத்திற்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த காணியில் உக்காத குப்பைகள் இடப்படும் இடம் மண்ணினால் மூடப்படல் மாத்திரம மேற்கொள்ளப்படுவதுடன், சுழல் நேய என இடப்படும் செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்சுயற்சி செய்ய முடியாத திண்ம கழிவுகளை மெல்லிய மண் படலத்தினால் மூடப்படல் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றாடல் நேய திண்மக் கழிவுப்பொருள் மீள்சுழற்சி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரன்ன கஸாகல பாதையில் இருந்து வெளிமிட்டி சந்தி வரையான சபையின் பாதையொன்றின் மூலம் 2019 பெப்ரவரி 21 திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு மண் போக்குவரத்து செய்வதற்காக நபரொருவருக்கு ரூபா 50,000 இற்கான குத்தகையயொன்று அறவீடு செய்து அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், மண் போக்குவரத்தின் பின்னர் பாதையை மீண்டும் உரிய நிலைக்கு மாற்றியிருக்காத போது அந்த குத்தகை மீது மீண்டும் ஒருமுறை 2022 ஜனவரி முதல் திசெம்பர் 06 திகதி வரை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | முன்னர் பெற்றிருந்த பிணைத் தொகையை பதிலீடு செய்து உடன்படிக்கையை நீடிப்பதற்கு தலைவர் எழுத்துமூலம் அறிவுரை வழங்கியிருந்தார் என. | பாதையை பரிசோதனை செய்து தர அறிக்கை பெற்றுக்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டு பராமரிக்கப்படும் வீதி விளக்குகளின் எண்ணிக்கையை உறுதியாக இனங்கண்டு அவற்றை இலக்கமிட்டு ஆவணப்படுத்தல் மீளாய்வாண்டின் போதும் பூர்த்தி செய்திருக்காமையால் சபையினால் செலவிடப்பட்டு பராமரிக்கப்படும் மின் விளக்கு எண்ணிக்கை தொடர்பாக நிச்சயிக்கப்பட்ட தகவல்கள் சபையில் காணப்படவில்லை. மீளாய்வாண்டின் போது வீதிவிளக்குகள் பராமரிப்புக்காக ரூபா 2,240,843 தொகை சபை நிதியித்திலிருந்து செலவிடப்பட்டிருந்ததுடன், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய PE/01/01 இலக்கம் கொண்ட கடிதத்திற்கு இணங்க வீதி விளக்குகள் பொறுத்தப்படாமையால் மேற்கொள்ளப்பட்ட செலவு மின்சார சபையினால் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | மின்சார சபையுடன் இதுவரை உடன்படிக்கை மேற்கொள்ள முடியாமல் போனது என. | மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் படி செயற்பட வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது இறுதியாக வாடகைக்கு கொடுத்திருந்த சபைக்குச் சொந்தமான வருடாந்தம் வாடகைக்கு கொடுக்கப்படும் 02 ஆதனங்கள் மீளாய்வாண்டின் போதும் வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாமல் இருந்தது. | இந்த ஆதனங்களை வாடகைக்கு பெறுவதற்கு வாடகையாளர்கள் முன்வராமையால் வாடகை அறவீடு செய்தல் சபையினாலே மேற்கொள்ளப்பட்டது என. | வாடகை நிபந்தனைகளை இலகுவாக்கி டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பிரதேச சபையினால் பயன்படுத்தப்படும் 140 காணிகளில் சட்டரீதியான உரிமை மற்றும் கிடைக்கப்பட்ட நாள் உறுதியாக குறிப்பிடப்பட்டிருக்காமை 04 வாடகனங்கள் மற்றும் இயந்திரங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகளை உரித்தாக்குவதற்கு பிரதேச செயலகம் மற்றும் மகவெலி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டதுடன், 04 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக உள்ளூராட்சி திணைக்களத்தின் பரிந்துரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொங்கிரீட் துண்டுக் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்யப்பட்ட 16 வீதி அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக 37.5 மில்லிமீற்றர் அளவான கற்கள் வழங்குதல் மற்றும் போக்குவரத்துக்காக ரூபா 4,106,786 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கற்களின் அடர்த்தியின் குணகம் உரிய நியமத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | அனைத்து நிர்மாண வேலைகளினதும் அடர்த்தி வீதம் 95 இற்கும் 100 இற்கும் இடைப்பட்ட சதவீதத்தில் காணப்பட்டமையால் கொடுப்பனவு செய்யப்பட்டது என. | கொடுப்பனவு மேற்கொள்வதற்காக உரிய சதவீதத்தில் பரத்தப்பட்ட ABC அடர்த்தி காணப்பட வேண்டும். |
| (ஆ) தகனசாலையின் நுழைபாதையின் மீதிப் பகுதி மற்றும் வாகனத் தரிப்பிடத்தில் துண்டுக் கற்கள் பதித்து வடிகால் மற்றும் பக்கச் சுவர் நிர்மாணிக்கும் நிர்மாண வேலையின் கீழ் கொங்கிரீட் துண்டுக் கற்கள் பதித்தல் மேற்கொண்டு கொங்கிரீட் துண்டுக் கற்களுக்காக ரூபா 3,258,756 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கொங்கிரீட் துண்டுக் கற்களில் இருக்க வேண்டிய அடர்த்தி 30 N/mm2 காணப்பட வேண்டியிருந்த போதிலும், தரப் பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 36 துண்டுக் கற்களில் 07 கற்கள் உரிய அடர்த்தியில் காணப்படாதிருந்த போதிலும் ஒப்பந்தக்காரருக்கு முழுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | பரத்தப்பட்ட துண்டுக் கற்களை பிடுங்கி அப்புறப்படுத்தி புதிதாக துண்டுக்கற்கள் பதிக்கப்பட்டு தரப் பரிசோதனை அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது என. | வெளிக்களத்தில் பரப்பப்பட்ட துண்டுக் கற்கள் உரிய அடர்த்தியில் காணப்பட வேண்டும். |
| (இ) கும்புக்முல்ல ஜனஉதானகம சிறுவர் பூங்கா நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக ரூபா 6,403,054 தொகை கொடுப்பனவு செய்திருந்தது. | | |
| i. இந்த நிர்மாண வேலையில் 252 சதுர மீற்றர் அளவு காணப்பட வேண்டிய PVC வலைவேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 1,119,943 தொகை கொடுப்பனவு அறிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் வலைவேலி உரியவாறு சாயம் பூசப்பட்டு இருக்காததுடன், வேலிக்காக பயன்படுத்தப்பட்டிருந்த GI குழாய்கள் துருப்பிடித்தலுக்கு ஆளாகியிருந்தது. | கொடுப்பனவு மேற்கொள்ள முன்னர் குறைபாடுகளை ஒப்பந்தக்காரர்கள் மூலம் சரி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மதிப்பீட்டின் படி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்ட வளவில் மண் நிரப்புவற்காக வெளியிலிருந்து 789 கியுபிக் மீற்றர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதென குறிப்பிட்டு ரூபா 10,615,568 தொகை கொடுப்பனவு அறிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் வெளியிலிருந்து மண் பெற்றுக்கொள்வதற்காக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியத்திலிருந்து பெற்றிருந்த அனுமதிப்பத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மண் அகழ்தல் மற்றும் போக்குவரத்தை ஒழுங்குறுத்துவதற்காக அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்கள் காணப்படுவதனால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை என. | கொடுப்பனவு செய்யப்பட்ட மண் கியுப் எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றுகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 24 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக 37.5 மில்லிமீற்றர் கற்களுக்காக, வடிவமைப்பு வேலைக்காக, கொங்கிரீடுக்காக மற்றும் கற்துகல்கள் போக்குவரத்துக்காக மிகைக் கொடுப்பனவு ஆகிய விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 191,138 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்தப்பட்டிருந்த பணம் தடுத்து வைத்தல் பணத்திலிருந்த மற்றும் ஒப்பந்த நிறுவனத்தை அறிவுருத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைக் கொடுப்பனவு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நிர்மாண வேலைப் பரிசோதனை – 2021 ஆண்டு தொடர்பாக வழங்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினா ஒன்றில் 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக மிகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 497,223 தொகை அறவீடு செய்வதற்கு நிதிப் பிரமாணம் 155 இன் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் தடுத்து வைத்தல் பணத்திலிருந்து அறவீடு செய்யப்படும் என. | மிகையாக செலுத்தப்பட்ட கொடுப்பனவு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |